**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.0351/அ1/2025, நாள். .01.2025.**

---

**பொருள் :** பாதுகாப்பு – வேலூர் மாவட்டம் – இந்திய விமானப்படை (மருத்துவ உதவியாளர் பதவி) ஆட்கள் தேர்வு – வருகின்ற 28.01.2025 முதல் 06.02.2025 வரை நடைபெற உள்ளது குறித்து அலுவலக தகவல் பலகையில் விளம்பரம் செய்திட கோருதல் – சார்பு.

**பார்வை :** வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண்.எம்1/2905740/2025, நாள்.22.01.2025.

-----

இந்திய விமானப்படையில் மருத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்கள் தேர்வு 14 விமானப்படை தேர்வு மையம், விமானப்படை, கொச்சியில் வருகின்ற 28.01.2025 முதல் 06.02.2025 வரையில் நடைபெறும் இத்தேர்விற்கு தகுதியுள்ள தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்தவர்களும் பங்கேற்கலாம் என்றும், இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள நூலகங்கள், வேலை வாய்ப்பு அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளிலும் விளம்பரம் செய்திட பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் இத்தேர்வு குறித்து தகவல் பலகைகளில் விளம்பரம் செய்திட அனைத்து அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**
ஆட்சியரின் கடித நகல்.

**// ஒப்பம் //**
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

பெறுநர் :
1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( இடைநிலைக் கல்வி/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளி).
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்.
4. அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   வேலூர் மாவட்டம்.

**நகல் :**
கோப்பிற்கு.